இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க, குறைந்தது 2 ஏக்கர் நிலப்பரப்பு மற்றும் ரூ.10 கோடி நிதி தேவைப்படும். மேலும், அந்தப் பகுதியில் பால் உற்பத்தி 30,000 லிட்டருக்குக் குறையாது இருக்க வேண்டும். தற்போது மொத்த பால் குளிர்விப்பான்கள், சிறிய அளவிலான பால் குளிரூட்டும் மையமாக, சங்க இடத்திலேயே அதன் உற்பத்தியைப் பொறுத்து, 500 லிட்டர் முதல் 5,000 லிட்டர் கொள்ளளவில் நிறுவப்பட்டு வருகின்றன. மேற்கண்ட காரணங்களால், உப்பிடமங்கலம் பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.*

திருமதி க. சிவகாமசுந்தரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

63—

தொழிற்பயிற்சி நிலையம்

***13871—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் பகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்களை வணங்கி மகிழ்கின்றேன். உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள

2022 ஏப்ரல் 6]

காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையமும், 11 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் அமைந்துள்ளன. அரசு தொழிற்பயிற்சி நிலையத்திலுள்ள 232 இடங்களில், 192 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டு, இன்னும் 40 இடங்கள் காலியாக உள்ளன. அம்மாவட்டத்திலுள்ள 11 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலுள்ள 1,600 இடங்களில், 1,055 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டு, இன்னும் 545 இடங்கள் காலியாக உள்ளன. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள 50 சதவிகித அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கான முழு கட்டணத்தையும் அரசே ஏற்றுக்கொண்ட பிறகும், 545 இடங்கள் காலியாக உள்ளன. எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்திலும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் அதிக காலியிடங்கள் உள்ள நிலையில், உத்திரமேரூர் பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்திடும் நிலை தற்பொழுது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் பகுதி, முழுக்க கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உத்திரமேரூர் பகுதி காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கிறது என்று குறிப்பிட்டார். அநேகமாக, அது ஸ்ரீபெரும்புதூர் என்று நினைக்கிறேன். உத்திரமேரூரிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் செல்வதற்கு ஏறத்தாழ 40, 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு மாணவர்களால் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டமாக இருந்தபொழுது, செங்கல்பட்டில் ஓர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் இருந்தது. உத்திரமேரூர் பகுதியில் இருப்பவர்கள் எல்லாம் செங்கல்பட்டு அல்லது சென்னைக்குச் செல்லக்கூடிய ஒரு நிலை இருந்தது. ஆனால், இன்றைக்கு வளர்ந்து வரும் மக்கள்தொகையின் அடிப்படையில், நிறைய இடங்கள் காலியாக இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில், அங்கேயிருக்கின்ற ஏழை விவசாய மாணவர்களால் கல்விக் கட்டணம் செலுத்த முடியாத நிலைமை இருக்கிறது. எனவே, அந்த நிலையை மாற்றி, உத்திரமேரூர்*

பகுதியிலேயே தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தந்தால், அந்தப் பகுதி மாணவர்கள் பயன்பெறுவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த மாவட்டம். நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் எப்போதுமே காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு முக்கியத்துவம் அளிப்பார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். எல்லாவற்றுக்கும் மேலாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு மிகவும் பிடித்த மாவட்டம், காஞ்சிபுரம். அதனால்தான், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் 20 ஆம் தேதி நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு, தனியார் நிறுவனங்களில் 8,752 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை அன்றையதினமே வழங்கி சிறப்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிகழ்ச்சியில் 72,000 இளைஞர்கள் கலந்துகொண்டார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, கட்டாயம் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. க. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசினுடைய முக்கிய குறிக்கோளே கல்வியும், சுகாதாரமும்தான் என்று குறிப்பிட்டு, அதில் முழு கவனத்துடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

2022 ஏப்ரல் 6]

எனவே, ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலத்திலேயே பிள்ளைகள் எல்லோரும் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடக்க வேண்டாம் என்று, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளேயே, கிராமப் பகுதிகளில் துவக்கப் பள்ளிகளைத் துவக்கிய பெருமை நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு பள்ளிக் கல்வியையும் மிகச் சிறப்பான முறையில் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதனைத் தொடர்ந்து, உயர் கல்வி என்பது சற்று சிரமமாகத்தான் இருக்கிறது. குறிப்பாக, கிராமப்புறத்திலே வாழும் ஏழையெளிய, விவசாயக் குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு அந்த வாய்ப்பு குறைவாக இருக்கிறது. ஆக, 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு முடித்து உயர் கல்வியைப் பெறமுடியாத மாணவர்கள், தொழிற்கல்வியில் சேர வேண்டுமென்று எண்ணுகிறார்கள். தொழிற்பயிற்சியைப் பெற்றால் சுய வேலைவாய்ப்பு அல்லது தனியார் மற்றும் அரசுத் துறைகளில் சேர்ந்து பணிபுரிய வாய்ப்பிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். என்றாலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 73 ஊராட்சிகளைக் கொண்ட மிகவும் பின்தங்கிய பகுதியான உத்திரமேரூர் பகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழையெளிய தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்றனர். எனவே, அந்தப் பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை நிச்சயம் அமைப்பார்களா என்பதை மிகவும் அன்போடு வலியுறுத்திக் கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்கிற அடிப்படையில்தான் அண்மையில் தமிழ்நாட்டில் இருக்கின்ற 91 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், 71 தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்திடும்வகையில், தொழிற்சாலைகளில் கையாளப்படும் இன்றைய நவீன தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப, நமது மாணவர்களுக்கு பயிற்சி வழங்க இயந்திரங்கள், உபகரணங்கள், கணினிகள் மற்றும்*

மென்பொருட்கள் வாங்குவதற்கு ரூ.2,877 கோடி நிதியினை வழங்கியுள்ளார்கள் என்பதனை மீண்டும் இந்த மன்றத்திற்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள்கூட, 8 ஆம் வகுப்பு தேறியவர்கள், தவறியவர்கள், 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படித்தவர்கள், தொழிற்கல்வி படித்தவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். ஆகவேதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலை, அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு, தமிழ்நாட்டில் இதுவரை 55 இடங்களில் தனியார் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, 65 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியுள்ளோம் என்பதனை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையை ஏற்று, தொடர்ந்து தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் இதுபோன்ற தனியார் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி விரைவில், இன்னும் இரண்டு மாத காலத்திற்குள்ளாக கட்டாயம் தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவோம் என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

வருகின்ற 10 ஆம் தேதி, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியிலும், 30 ஆம் தேதி மதுரை மாவட்டத்திலும், அதைத் தொடர்ந்து கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்திலும், பெரம்பலூரிலும் தொடர்ந்து இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும். இதன்மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவோம் என்பதை இந்த நேரத்தில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் கடந்த ஆண்டுகளில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் செயல்பட்டு வந்தது. இடப்பற்றாக்குறை காரணமாக, புதிய

2022 ஏப்ரல் 6]

கட்டடம் கட்டுவதற்கான வாய்ப்பு வந்தபோது, அங்கிருந்த I.T.I. என்று சொல்லப்படுகிற தொழிற்பயிற்சி நிலையம், பக்கத்து வட்டமான திருமுட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டது. பலரும் மூடத்தனங்களை நம்பி அரசியல் செய்துகொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், மூலதனத்தை ஈர்க்க வேண்டுமென்கிற அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு பயணம் மேற்கொண்டு மகத்தான மூலதனங்களை ஈர்த்து, தமிழக இளைஞர்களின் மத்தியிலே ஒரு மாபெரும் நம்பிக்கையை விதைத்திருக்கிறார்கள்.

ஆகவே, காட்டுமன்னார்கோவில் பகுதி மக்களும்கூட, ஒரு தொழிற்பயிற்சி நிலையம் தங்கள் வட்டத்திலே அமைந்தால் நிச்சயமாக புதிய வாழ்வைப் பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள். காட்டுமன்னார்கோவிலில் ஏற்கெனவே அமைந்திருந்த அந்தத் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு புதிய இடங்களை கண்டறிந்திருக்கின்றோம். அதே இடத்தில் மீண்டும் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன். நன்றி.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். தொழிற்பயிற்சி நிலையம் இப்போது வேறு இடத்திற்குச் சென்று விட்டது; இப்போது வருமா என்று மட்டும் சுருக்கமாகப் பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள், பலமுறை காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதியிலே I.T.I. வேண்டுமென்று நேரடியாகவும் கேட்டிருக்கிறார்கள்; இப்போது வினாவாகவும் எழுப்பியிருக்கிறார். ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைய வேண்டுமானால், 1.50 ஏக்கர் நிலமும், குறைந்தபட்சம் 10 கோடி ரூபாய், அதாவது, கட்டடங்கள், தளவாடங்கள் உபகரணங்கள் வாங்குவதற்கு 10 கோடி ரூபாயும்*

தேவைப்படுகிறது. ஆகவே, இதுகுறித்து அரசு அதிகாரிகளை தங்கள் தொகுதிக்கு அனுப்பி ஆய்வு மேற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாக ஏற்பட்டுள்ள தொழில் முதலீடுகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் துபாய் மற்றும் அபுதாபி நாடுகளில் ஈர்க்கப்பட்டுள்ள முதலீடுகள், வேலைவாய்ப்புகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்த தொழில் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடு) *இது முடிந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110—ன்கீழ் ஓர் அறிக்கையினை, குறிப்பாக தொழில் முதலீடுகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்த ஓர் அறிக்கையினைத் தங்களுடைய அனுமதியோடு இந்த அவையிலே எடுத்து வைக்க விரும்புகின்றேன்.*

2021 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலுக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் "தொழில் துறையை மீட்டெடுப்போம்", "தொழில் வளர்ச்சியைப் பரவலாக்க கொள்கைகள் வகுக்கப்படும்", "தொழில் தொடங்க முன்வருவோரை ஊக்குவிக்கக்கூடிய வகையில் ஒற்றைச் சாளர முறை மூலமாகத் தொழில் வளத்தைப் பெருக்குவோம்" என்று